சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை 'தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்' அமைத்து, வாரியத்தில் உறுப்பினர் சேர்த்தல் மற்றும் உறுப்பினர்களுக்கு நல உதவிகள் வழங்குதல் –ஆணைகள் வெளியிடப்படுகிறது

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் (பிந3)நலத்துறை,

அரசாணை (நிலை) எண்: 60 நாள்: 27.5.2008

திருவள்ளுவர் ஆண்டு 2039, வைகாசி மாதம் –15

படிக்கப்பட்டது:

மிகப்பிற்படுத்தபட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண். டி1/2464/2008, நாள் 03.04.2008 மற்றும் டி1 /2429/2008 நாள் 29.04.2008

* * * *

ஆணை:

"நரிக்குறவர்களை, நல்ல நெறிக்குறவர்கள் என்று அழைத்து, அவர்கள் பல்வேறு இடங்களுக்கும் அலைந்து திரியாமல், ஓரிடத்தில் இருந்து வாழ வேண்டும் என்பதற்காக அவர்களுக்கென தி.மு.க. ஆட்சியில் திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் ஒன்றியம், தேவராயநேரி என்னும் இடத்தில் கட்டப்பட்ட 140 குடியிருப்புகளை 13.3.1975 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள். இருப்பினும், நரிக்குறவர்கள் இன்றும் நாடோடிகளாகவே வாழ்ந்து வருகின்றனர். மேலும், அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் இவர்களை இன்னும் சென்றடைய இயலாத நிலை உள்ளது. இவர்களுக்குக் கல்வி, மாற்றுத் தொழில் புரிவதற்கான உதவி ஆகியவற்றை அளிக்கவும், அவர்களுக்குப் பல்வேறு நல உதவிகளை வழங்குவதற்கும் தனி நலவாரியம் ஒன்று அமைக்கப்படும்'' என்று 2008-09–ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பினை நிறைவேற்றும் வகையில் ''தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்" எனும் புதிய அமைப்பு உருவாக்கப்பட்டு, அதற்கு மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நல துறை அமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்டு பின் வருமாறு அரசு ஆணையிடுகிறது.

அரசு சார்ந்த உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. | செயலாளர், நிதித்துறை | உறுப்பினர் |
| 2. | செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை | உறுப்பினர் |
| 3. | செயலாளர், வருவாய்த்துறை | உறுப்பினர் |
| 4. | செயலாளர், சமூகநலத்துறை | உறுப்பினர் |
| 5. | செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை | உறுப்பினர் |
| 6. | செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்நலத்துறை | உறுப்பினர் |
| 7. | இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை | உறுப்பினர் |
| 8. | இயக்குநர், பள்ளிக்கல்வி துறை | உறுப்பினர் |

9. ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை — உறுப்பினர்- செயலர்

<u>அலுவல் சாரா உறுப்பினர்கள்</u>

10. திரு.மா.சங்கர், — உறுப்பினர்
த/பெ.பி.மாணிக்கம்
நரிக்குறவர் காலனி, கோளியனூர் கூட்ரோடு,
விழுப்புரம் - 605 103

11. திரு.ஏ.கே.பாபு, — உறுப்பினர்
த/பெ. குப்பன்
நரிக்குறவர் குடியிருப்பு, கும்பகோணம் மெயின் ரோடு,
வடலூர்–607 303

12. திரு. பி.எம்.ஜே. ராஜ்குமார் — உறுப்பினர்
5, நரிக்குறவர் காலனி, கோட்டூர்புரம்,
சென்னை –600 085

13. திரு. ஆர். சிவக்குமார் — உறுப்பினர்
த/பெ. ராஜாமணி
424, மலையப்பா நகர், காரை அஞ்சல், குன்னம் தாலுகா
பெரம்பலூர் மாவட்டம்.

14. திரு. எஸ். ராஜேந்திரன், — உறுப்பினர்
பழைய எண்.240, புதிய எண்.17, அண்ணா நகர்,
நரிக்குறவர் காலனி, பன்னத்துப்பட்டி, கீரனூர் அஞ்சல்
குனத்தூர் தாலுகா, புதுக்கோட்டை

15.திரு. எஸ்.ஜீவா, — உறுப்பினர்
த/பெ.டி.சோமு
1/39, பூலாங்குடி, நரிக்குறவர் காலனி, பழகனாங்குடி அஞ்சல்
திருச்சி–620 025

16.திரு. எம்.பாண்டியன், — உறுப்பினர்
19, குறவன் காலனி, விருத்தாசலம்
கடலூர் மாவட்டம்–608 702

17.திரு.டி.சேகர், — உறுப்பினர்
19/39, முத்து நகர்,
நரிக்குறவர் காலனி, துடியலூர் அஞ்சல்
கோயம்புத்தூர்–641 034

18. திரு. எஸ். ரவிச்சந்திரன், — உறுப்பினர்
569, நரிக்குறவர் காலனி
குகை, சேலம்– 636 006

19. திருமதி. என்.காசியம்மாள், — உறுப்பினர்
நரிக்குறவர் காலனி, கான நகர்,
மாரியம்மன் கோயில் தெரு,
திருவண்ணாமலை மாவட்டம்.

**2.** நரிக்குறவர் இனத்தவரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கென அரசு செயற்படுத்தும் பல்வேறு திட்டங்களின் செயலாக்கத்தை கண்காணித்து. இப்பிரிவினரின் மேம்பாட்டினை உறுதிசெய்ய தக்க ஆலோசனைகளை இவ்வாரியம் அரசுக்கு வழங்கும்.

**3.** நரிக்குறவர் நல வாரியத்தில் உறுப்பினர்களைச் சேர்த்து வாரிய உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு நல உதவிகளும் வழங்கப்பட வேண்டும் என்று இவ்வரசு முடிவு செய்து நரிக்குறவர் நல வாரியத்தில் உறுப்பினர்கள் சேர்க்கை மற்றும் உதவி தொகைகள் வழங்குவதற்கான வழி முறைகள் குறித்து அரசு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

**4.** (i) அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியத்தில் கீழ்க்கண்டவாறு வழங்கப்படும் பல்வேறு நல உதவிகள் நரிக்குறவர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்து கொள்பவர்களுக்கும், அவர்களது குடும்பத்தாருக்கும் வழங்கப்படும்:

| | | |
|---|---|---|
| **1. <u>விபத்து ஈட்டுறுதி திட்டத்தின் கீழ்:</u>** | | |
| | அ) விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித் தொகை | ரூ.1,00,000/- |
| | ஆ)விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | ரூ.10,000/- முதல் ரூ.1,00,000/-வரை |
| 2. | இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை | ரூ. 15,000/- |
| 3. | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித் தொகை | ரூ.2,000/- |
| 4. | **<u>கல்வி உதவித் தொகை</u>** | |
| | அ) 10-ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1000/- |
| | ஆ) 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1000/- |
| | இ) 11–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1000/- |
| | ஈ) 12–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1500/- |
| | உ) 12–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு | ரூ.1500/- |
| | ஊ) முறையான பட்டப்படிப்புக்கு<br>மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்புக்கு | ரூ.1500/-<br>ரூ.1750/- |
| | எ) முறையான பட்ட மேற்படிப்புக்கு<br>மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்புக்கு | ரூ.2000/-<br>ரூ.3000/- |
| | ஏ) தொழிற்கல்வி பட்டப் படிப்புக்கு<br>மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்டப்படிப்புக்கு | ரூ.2000/-<br>ரூ.4000/- |
| | ஐ) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்புக்கு<br>மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்புக்கு | ரூ.4000/-<br>ரூ.6000/- |
| | ஒ) ஐ.டி.ஐ அல்லது தொழிற்பயிற்சி படிப்புக்கு மாணவர் இல்ல வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது பல்தொழில் பயிற்சி படிப்புக்கு | ரூ.1000/-<br>ரூ.1200/- |
| 5. | திருமண உதவித் தொகை | ரூ.2000/- |
| 6. | **<u>மகப்பேறு உதவித் தொகை</u>** | |

| | | |
|---|---|---|
| | அ) மகப்பேறு: மாதம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம்<br>ஆ) கருச்சிதைவு/ கருக்கலைப்பு | ரூ.6000/-<br><br>ரூ.3000/- |
| 7. | மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | ரூ.500/- வரை |
| 8. | முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் | ரூ.400/- |

ii) நரிக்குறவர் நல வாரியத்தின் உறுப்பினர் – செயலராக மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் நியமனம் செய்யப்படுகிறார்.

iii) நரிக்குறவர் இனத்தை சேர்ந்த குடும்பங்களைக் கண்டறிந்து அடையாள அட்டைகள் வழங்கும் பணியினை அந்தந்த மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மேற்கொள்வார்.

iv) நரிக்குறவர் வகுப்பைச் சார்ந்த **18** வயது முடிவடைந்த, ஆனால் **60** வயது முடிவடையாத ஒவ்வொருவரும் நரிக்குறவர் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய தகுதி பெற்றவராவர்.

v) உறுப்பினர் பதிவுக்குரிய விண்ணப்பங்களை தகுதி வாய்ந்த நபருக்கு வழங்கி அவர்களிடமிருந்து பெறப்பட்ட உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பங்களைப் தொகுத்து, உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின நல அலுவலர் வழங்குவார். நிதி உதவி வழங்கக்கோரும் விண்ணப்பங்களை ஆய்வு செய்து தகுதியான உறுப்பினர்களுக்கு நல உதவிகளை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின நல அலுவலர் மூலம் வழங்கப்படும்.

vi) வாரிய உறுப்பினர் சேர்க்கைக்குரிய விண்ணப்ப படிவம், வாரியத்தின் விதிமுறைகள், வாரியத்தின் இதர செயல்பாடுகள் முதலிய அனைத்திற்கும் தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் இதர அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பின்பற்றப்படும் அனைத்து நடைமுறைகளும் மேற்கொள்ளப்படும்.

vii) பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கு மாவட்ட நிர்வாகத்திற்கு தேவையான நிதி நரிக்குறவர் நல வாரியத்தின் நிதியிலிருந்து வழங்கப்படும்.

(viii) மேற்காணும் நிதி உதவிகள் யாவும் தகுதியான நபர்களுக்கு மட்டுமே அளிக்கப்படும். அரசு/அரசு சார்ந்த மற்றும் அமைப்பு சார்ந்த நிறுவனங்களில் (Organised Sector) பணிபுரிந்து அந்நிறுவனங்களில் வழங்கப்படும் அனைத்து சலுகைகளையும் பெறும் நரிக்குறவர் இத்திட்டங்களின் பயன்களை பெற இயலாது. வேறு நல வாரியங்களில் உறுப்பினராக உள்ள நரிக்குறவினர் ஏதேனும் ஒரு நல வாரியத்தின் மூலம் மட்டும்தான் நலத்திட்ட உதவிகளைப் பெற தகுதியுடையவர் ஆவார்.

ix) மேற்குறிப்பிட்டுள்ள பணிகள் மாவட்டங்களில் சீராக நடைபெறுவதைக் கண்காணிக்கவும் ஆய்வு செய்யவும் மாநில அளவில் நரிக்குறவினர் நலவாரியத்திற்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகிறது.

x) சேர்க்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை, அடையாள அட்டை வழங்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை, நல உதவிகள் இனம் வாரியாக வழங்கப்பட்ட எண்ணிக்கை மற்றும் தொகை, மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் தொகை போன்ற விவரங்கள் அடங்கிய அறிக்கையினை பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு வாரியத்தின் உறுப்பினர்–செயலர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேலும் நரிக்குறவர் நல வாரியத்தில் உறுப்பினராகச் சேரும் நரிக்குறவர்களுக்குக் கீழ்க்கண்ட சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் ஆணை வெளியிடப்படுகிறது.

(i) நரிக்குறவர்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளைக் கண்டறிந்து, அப்பகுதியில் உண்டு, உறைவிடப் பள்ளி (Residential Schools) துவக்கப்படும்.

(ii) நரிக்குறவர்கள் சிறுதொழில் நடத்த, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 50 விழுக்காடு மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படும்.

iii) மாநில அளவில் மற்றும் தேசிய அளவில் நடத்தப்படும் பொருட்காட்சிகளில் (நரிக்குறவர் நல வாரியத்தின் சார்பில்) நரிக்குறவர்கள் அரங்குகள் அமைக்க அரங்கு வாடகை வழங்கலாம்.

**6.** புதியதாகத் தோற்றுவிக்கப்படும் "நரிக்குறவர் நல வாரியம்" நரிக்குறவர்களின் நலனுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்களின் அமலாக்கத்தைக் கண்காணிக்கவும், மேலும் புதிய திட்டங்கள் அமுல்படுத்தப்படுவது குறித்து அரசுக்கு ஆலோசனைகள் வழங்கவும், மற்றும் இக்குழுவினை **முதல்நிலைக் குழுவாகவும்** (தினப்படி /பயணப்படி பெறுவதற்கு), இதன் பதவிக்காலம் 3 ஆண்டுகள் என நிர்ணயித்து, அரசு ஆணை வெளியிடுகிறது.

7. மேற்குறிப்பிட்டவாறு நல உதவிகள் நரிக்குறவர் நல வாரியத்தில் பதிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு வழங்குவதற்காகவும், இது தொடர்பான பிற பணிகளை மேற்கொள்வதற்காகவும் நரிக்குறவர் நலவாரியத்திற்கு ரூபாய். 1,00,00,000 (ரூபாய் ஒரு கோடி) அனுமதித்து ஆணையிடப்படுகின்றது. நரிக்குறவர் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவித் திட்டங்களுக்கான நிதியினை தேவைக்கேற்ப மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்ய மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

8. மேலே பத்தி 7–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் புதிய கணக்குத்தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்

"2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 80 – பொது – 800 – ஏனைய செலவு – I - திட்டத்தில் சேராதது AD நரிக்குறவர் நல வாரியம் – 09 – உதவி மானியங்கள் – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள்". (து.தொ.கு. எண்: 2225– 80– 800 –AD – 0936)

**9.** மேற்சொன்ன புதிய கணக்கு தலைப்பிற்கு ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, சென்னை–5, மதிப்பீடு, கணக்கு, நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரி ஆவார்.

கணக்குகளில் மேற்ச்சொன்ன புதிய கணக்கு தலைப்பினை தொடங்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர்/ கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**10.** மேலே பத்தி 7–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் நரிக்குறவர் நல வாரியத்திற்கு பணமாக வழங்கப்படாமல் இவ்வாரியத்தின் உறுப்பினர்-செயலர் பெயரிலான தன்வைப்புக் கணக்கில் காசோலை/வரைவோலை மூலம் வரவு வைக்கப்பட வேண்டும்:

"K" - வைப்பீடுகளும், முன்பணமும் (b) வட்டியில்லா வைப்புத் தொகைகள் – 8443-00– உரிமையியல் வைப்புத் தொகைகள்–800–பிற வைப்புத் தொகைகள் DH நரிக்குறவர் நல வாரியத்தின் வைப்புத் தொகைகள்.
(து.தொ.கு எண்: 8443–00–800 DH 000E) Recepits
(து.தொ.கு எண்: 8443–00–800 DH 0006) Out go.

11. இச்செலவினம் ஒரு "புதுப்பணி" குறித்த செலவினமாகும். இதற்கான நிதி 2008–09ம் ஆண்டின் துணை மதிப்பீடுகளில் ஒதுக்கப்படும். இச்செலவினத்திற்கு சட்டப்பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். பேரவையின் ஒப்புதல் பெறப்படுவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை எதிர்பாரா செலவு நிதி(Contingency Fund) லிருந்து முன்பணமாக பெற்று செலவு செய்யப்படும். இதற்கான ஆணை நிதி (BG.I)துறையால் தனியே

வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன் பணம் பெ றுவதற்கு இவ்வாணையின் நகலுடன் நிதி (BG.I)துறைக்கு விண்ணப்பிக்குமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

12. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண். 137/DS(B)/08, நாள் 26.05.08–ன்படி இசைவு பெற்று வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண். 155 (நூற்று ஐம்பத்தைந்து) ஆகும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ந.வாசுதேவன்,
அரசுச்செயலாளர்

<u>பெறுநர்</u>

ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, சென்னை-5
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர்,சென்னை.–5
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
நரிக்குறவர் நல வாரியத்தின்தலைவர்,
அனைத்து அலுவல்சாரா உறுப்பினர்கள் (சீர்மரபினர் நல வாரிய
உறுப்பினர் – செயலர் வழியாக)
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நல அலுவலர்கள்
அரசு செயலாளர், நிதித்துறை, சென்னை–9.
அரசு செயலாளர், வருவாய்த்துறை, சென்னை–9.
அரசு செயலாளர், சமூக நலம் மற்றும் சத்துணவுத்துறை, சென்னை–9.
அரசு செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–9.
அரசு செயலாளர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை–9.
இயக்குநர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை-6
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம். சென்னை–2.
முதலமைச்சரின் செயலர், சென்னை–9,
மாநில கணக்காயர், சென்னை–18/35
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை.–5
நிதி (வரவு–செலவு பொது I,II)/வருவாய்/பள்ளிக்கல்வி/பி,மிபி (ம) சிந) துறைகள், சென்னை–9.
தொழிலாளார் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை–9
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9
தலைமைச் செயலரின் தனிச் செயலர், சென்னை–9
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்கள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.